**<u>O .S. 92/2015,       10.02.2021,                    04.00 pm - 04.05 pm</u>**

**பி.வா.சா.2, ராமமூர்த்தி, த/பெ.கோவிந்தசாமி முதலியார்**
சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

20.02.1978 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அம்மாயி அம்மான் பெயரிலுள்ள கிரயப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழியை ஏற்படுத்தியதாக என்னுடைய எதிருரையில் கூறியுள்ளதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து அந்த பாதையை அப்புறப்படுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. வாதிகள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>**          இல்லை.